இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 26 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 20 – வெள்ளிக்கிழமை 05 செப்டம்பர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 26 : Thiruvalluvar Year - 2056 - Aavani 20 - Friday 05 September 2025 - Dak 12 Pages ₹ 5.00

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 3.9.2025 அன்று TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில், இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் உள்ள வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தில், இங்கிலாந்து அமைச்சர், நாடாளுமன்ற துணை செயலாளர் (இந்தோ–பசிபிக்) கேத்தரின் வெஸ்ட் அவர்களை சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு – இங்கிலாந்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் 3.9.2025 அன்று இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பரிமாற்ற அலுவலர் நிக்கலோ கிராடி ஸ்மித் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இலண்டனில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ரோல்ஸ் ராய்ஸ்’ நிறுவன உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு!

தமிழ்நாட்டின் நீண்டகால உத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

இலண்டன், செப்.5-

உலகின் முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனமான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடனான சந்திப்பின்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஓசூரில் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள IAMPL நிறுவனத்தின் விரிவாக்கம் தொடர்பாக ஆலோசனை வுடன், லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ், வில்சன் பவர் & டிஸ்ட்ரிபியூஷன் டெக்னாலஜிஸ், பிரிட்டானியா RFID டெக்னாலஜிஸ் இந்தியா, எக்ஸிடர் பல்கலைக்கழகம், Ecole Intuit Lab ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று முன்தினம் (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களுடனான தொடர்ச்சியான உயர் மட்ட கூட்டங்களுக்கு தலைமை தாங்கி, பாதுகாப்பு மற்றும் விண்வெளி, கப்பல் கட்டும் நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஜவுளி தொழில் நுட்பம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்ட தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தமிழ் நாட்டை தேசிய மற்றும் உலகளாவிய முன்னணி மாநிலமாக நிலைநிறுத்து வதில், அதிக மதிப்புள்ள மற்றும் எதிர்கா லத்திற்கு பொருத்தமான துறைகளில் தமிழ்நாட்டிற்கான நீண்டகால உத்திக் கான நடவடிக்கைகளைக் குறிக்கின்றன.

ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடன் சந்திப்பு

உலகின் முன்னணி விண்வெளி

மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர் களுடனான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சந்திப்பு மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாகும்.

இச்சந்திப்பின்போது, MRO வசதி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயிற்சி மையம் மற்றும் ஓசூரில் அதன் IAMPL கூட்டு முயற்சியின் குறிப்பிடத்தக்க விரி வாக்கம் ஆகியவற்றுடன், தமிழ்நாட்டில் அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்து வதில் இந்நிறுவனம் தனது வலுவான ஆர்வத்தை வெளிப்படுத்தியது. இந்தியா வின் இரண்டு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்களில் ஒன்றான தமிழ்நாட் டில், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் இந்த ஈடுபாடு, மேம்பட்ட விண்வெளி உற்பத் திக்கான மையமாக மாநிலத்தின் திறனை விளக்குகிறது.

கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனம் (SEASEARCHER) சென்னை யில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது. இது 2026 நிதியாண்டில் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உரு வாக்கும். கடல்சார் இடர் மேலாண்மை, காப்பீடு மற்றும் கப்பல் கண்காணிப்பு பகுப்பாய்வுகளில் உலகின் முன்னணி நிறுவனமான லாயிட்ஸ் நிறுவனத்தின் விரிவாக்கம், கப்பல் கட்டுதல், துறைமுக மேலாண்மை மற்றும் கடல்சார் தொழில் நுட்பத்தில் தமிழ்நாட்டின் திறன்களை கணிசமாக மேம்படுத்தும். இதன் முதன் மையான SEASEARCHER நிறுவனம், உலகளாவிய கப்பல் இயக்கங்கள், உரிமை கட்டமைப்புகள் மற்றும் துறை முக நடவடிக்கைகள் பற்றிய நிகழ்நேரத் தெரிவுநிலையை வழங்குகிறது. இது தமிழ்நாட்டின் பரந்த நீலப் பொருளாதார திறனை ஊக்குவிப்பதாக அமையும்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

தமிழ்நாட்டுக்கு உறுதுணையாக நின்று – தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும்

மலையாளச் சகோதர - சகோதரிகளுக்கு ஓணம் திருநாள் வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 5-

ஓணத் திருநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், “தமிழ்நாட்டுக்கு உறுதுணை யாக நின்று, தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும் மலையாளச் சகோதர சகோதரிகளுக்கு ஓணம் திருநாள் வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் களின் ஓணத் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அறுவடைத் திருநாளாம் ஓணத்தினை எழுச்சியோடும் ஏற்றத்தோடும் கொண் டாடும் என் மனதிற்கினிய மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் ஓணம் நல்வாழ்த்துகள்!

பூக்களம், புத்தாடை, அறுசுவை உணவு, கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளுடன் சமத்துவத்தையும் ஒற்று மையையும் கேரள மக்களின் சகோதர உணர்வையும் வெளிப்படுத்தும் கொண் டாட்டமாக அமைந்துள்ள திருநாள்தான் ஓணம். “மாயோன் மேய ஓண நன்னாள்” எனச் சங்கத் தமிழிலக்கியத்திலும் பதிவாகி யுள்ள, திராவிட இனத்தின் திருவிழாவாகத் திருவோணம் விளங்குகிறது.

ஓணத்தின் மீது சமத்துவத்துக்கு எதி ரான குழுவினர் புனைந்த கதைகளில் இருந்தும், நம்வரலாற்றைமீட்டுருவாக்கம் செய்து, நல்லாட்சி புரிந்த மாவலி மன்னனை நினைவுகூரும் கொண்டாட்ட மாக மலையாளிகள் ஓணத்தைப் போற்றி வருகின்றனர்.

திராவிட உணர்வெழுச்சியுடன் தமிழ் நாட்டுக்கு உறுதுணையாக நின்று, தென் னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும் மலையாளச் சகோதர - சகோதரிகள் அனைவருக்கும் இந்த ஓணம் பொன் னோணமாகத் திகழ எனது வாழ்த்துகள்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

நாட்டில் சிறந்த கல்வியை வழங்கும்

கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முன்னிலை!

புதுடெல்லி, செப். 5-

NIRF என்ற தேசிய நிறு வுன தரவரிசை கட்ட மைப்பு சார்பில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், இந்திய அளவில் சிறந்து விளங்கும் உயர் கல்வி நிறுவனங்களின் தரவ ரிசைப் பட்டியலை வெளி யிட்டார். அதன்படி, சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான உயர்கல்வி தரவரிசைப் பட் டியலில் சென்னை ஐ.ஐ.டி. தொடர்ந்து 7வது ஆண் டாக முதலிடம் பிடித் துள்ளது.

சிறந்த மாநில பல்கலைக் கழகங்களுக்கான தரவரி சைப் பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் 2வது இடத்தில் உள்ளது.

சிறந்த பல்கலைக்கழகங் களுக்கான தரவரிசைப் பட் டியலில் கோவை அமிர்தா பல்கலைக்கழகம் 8வது இடத்தையும், சிறந்த மருத் துவக் கல்லூரி தரவரிசை பட்டியலில் வேலூர் கிறிஸ் தவ மருத்துவக் கல்லூரி 3வது இடத்தையும் பிடித் துள்ளது. சிறந்த கல்லூரிக ளுக்கான தரவரிசைப் பட்டி யலில் கோவை PSGR கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி 9வது இடத்தை யும், கோவை PSG கலை மற் றும் அறிவியல் கல்லூரி 10வது இடத்தையும் பிடித் துள்ளது.

இதற்கான போட்டியில் இந்தியா முழுவதிலும் இருந்து 8 ஆயிரத்து 686 கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றன. இதில் அதிகபட்ச மாக தென்னிந்திய பகுதி களில் இருந்து மட்டும் 3 ஆயிரத்து 344 கல்வி நிறுவ னங்கள் பங்கேற்றிருந்தது.

கல்வி நிறுவனங்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில் முறை பயிற்சி, பட்டப்ப டிப்பு முடிவு, தொடர்பு மற் றும் உள்ளடக்கம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகம், கல்லூரி, ஆராய்ச்சி, என்ஜி னீயரிங், மேலாண்மை, துணை மருத்துவம், மருத்து வம், பல் மருத்துவம், சட் டம், கட்டிடம் மற்றும் திட் டமிடல், வேளாண்மை மற்றும் அது சார்ந்த படிப்பு கள், புதுமையான கண்டு பிடிப்புகள், ஒட்டுமொத்த பட்டியல் ஆகிய பிரிவுகளில் சிறந்த கல்வி நிறுவனங் களுக்கு புள்ளிகள் வழங்கப் பட்டு, அதில் சிறந்த இடத்தை பிடிக்கும் நிறுவ னங்களின் பெயரை இந்த தரவரிசை பட்டியலில் இடம்பெற செய்து வெளி யிடுகிறது என்பது குறிப் பிடத்தக்கது.